IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
O.S.No. 63 /2010
Deposition of witness for PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : சுப்பிரமணி | Caste | : - |
| Father's Name: | முனுசாமி | Calling | : - |
| Village : | பாளையகுப்பம் கிராமம் | Religion | : இந்து |
| Taluk | : - | Age | : 80 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 28 day of September , 2018.

Cross Examination

எனக்கு தற்பொழுது 80 வயது ஆகிறது. நான் நிரந்தரமாக பெங்களூரில் வசிக்கிறேன். இந்த வழக்கிற்காக எனது மகள் வீட்டிற்கு வந்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். அடிக்கடி நான் இங்கு வந்து செல்வது வழக்கம். நான் 15 வருடத்திற்கு முன்பு பெங்களூருக்கு சென்று குடியேறினேன். நான் பெங்களூரில் என்ன தொழில் செய்கிறேன் என்றால் தொழில் எதுவும் கிடையாது, எனது மகள் மற்றும் மனைவி ஆகியோர் பெங்களூரில் உள்ளார்கள் அவர்களுடன் உள்ளேன். எனக்கு இரண்டு மகன்கள் உண்டு முத்தப்பன், இரண்டாவது மகன் பெயர் கிருஷ்ணன் ஆகும். முத்தப்பனுக்கு இரண்டு மகள் மற்றும் ஒரு மகன் உள்ளனர் முத்தப்பன் மனைவி பெயர் தற்பொழுது எனக்கு நினைவில் இல்லை. முத்தப்பன் சுமார் 8 வருடங்களுக்கு முன்பு காலமானார். அவர் காலமான தேதி, மாதம் மற்றும் வருடம் நினைவில் இல்லை. இரண்டாவது மகன் கிருஷணன் அவர் மனைவியுடன் ஏற்பட்ட தகராறு காரணமாக தற்கொலை செய்துகொண்டார். கிருஷ்ணனின் மனைவி பெயர் சுமதி. கிருஷ்ணனுக்கு ஒரே ஒரு மகன் உள்ளார். கிருஷ்ணன் இறக்கும் தருவாயில் பெங்களூரில்தான் வசித்தார் அங்கே தான் இறந்தார். கிருஷ்ணன் ஏதோ வேலை செய்தார் என்ன வேலை என்று எனக்கு தெரியாது. அங்கேயே இறந்தார். பெரியமகன் முத்தப்பன் பெங்களூரில் இருக்கும்போது வாகன விபத்தில் இறந்தார். நான் எனது மகன்கள் உயிருடன் இருக்கும்

காலகட்டத்தில் மகன் வீட்டிலும் இருப்பேன் பெண் வீட்டிலும் இருப்பேன். எனக்கு 6 மகள் ஆகும். பெங்களூரில் 3 மகள்களும், வேலூரில் 3 மகள்களும் உள்ளனர். பாளையம்குப்பம் கிராமத்தில் 2 மகள்களும் இராணிப்பேட்டையில் 1 மகளும் உள்ளனர். நான் இராணிப்பேட்டையிலும் இருப்பேன், பாளையம் குப்பத்திலும் இருப்பேன் பெங்களூருக்கும் சென்று வருவேன். நான் எனது வாக்குமூலத்தில் எனது முகவரியாக கொடுத்துள்ள முகவரி எனக்கு தெரியாது. நான் இந்த வழக்கை எந்தெந்த புல எண்களுக்கு எவ்வளவு விஸ்தீரணத்திற்கு வழக்கு போட்டுள்ளேன் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கின் விவரங்களை யார் எனது வழக்கறிஞரிடம் கூறியது என்றால் எனது அக்காள் கணவரை அழைத்து கொண்டு சென்றேன் அவர் கூறினார். அவர் பெயர் நினைவில் இல்லை. மொத்தம் எத்தனை புல எண்களுக்கு நான் வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு தாவா சொத்துக்கள் எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் அவை பரம்பரை சொத்துக்கள் எனது தாத்தா சம்பாதித்து வைத்தது. என்னுடைய தாத்தா பெயர் முத்தப்பன் அவர் சம்பாதித்து வைத்த சொத்து தான் எனக்கு பாத்தியப்பட்டது. எனது தாத்தா யாரிடமிருந்து தாவா சொத்துக்களை வாங்கினார் என்றால் கிரையமாக வாங்கவிலலை கடன் கொடுத்து அந்த கடன் திருப்பி தரப்படாததால் மேற்படி தாவா சொத்துக்களை அவர் பெற்றார். யாருக்கு எனது தாத்தா கடன் கொடுத்தார் என்றால் நெடுநாள் ஆன காரணத்தினால் தற்பொழுது எனக்கு நினைவில் இல்லை. நான் தெலுங்கு வழி கல்வியில் 5 வகுப்பு வரை படித்துள்ளேன். என்னுடன் உடன் பிறந்தவர்கள் மொத்தம் என்னுடன் சோத்து 3 நபர்கள் முதல் சகோதார் கந்தப்பன் (எ) கந்தசாமி,இ இரண்டாவது சகோதார் அக்காரி ஆகும். மூண்றாவது நான். எனக்கு மேலும் குப்பம்மாள் என்ற ஒரு சகோதரியும் உள்ளார். எனது மூத்த சகோதரர் கந்தப்பன் (எ) கந்தசாமி நெடுநாளுக்கு முன்பு இறந்து விட்டார் அவருக்கு திருமணமாகி முருகம்மாள் என்கிற மனைவி இருந்தார் அதன் பிறகு அவர் இறந்தார். கந்தப்பன் (எ) கந்தசாமிக்கு ஒரே மகன் இருந்தார் அவர் பெயர் முத்தப்பன் ஆகும். நான் எனது சகோதரர்களுடன் எப்பொழுது பாகம் பிரித்துக்கொண்டேன் என்றால் 20 அல்லது 30 வருடங்களுக்கு முன்பு நாங்கள் பாகம்

பிரித்துக்கொண்டோம். நாங்கள் மூவரும் பத்திரம் எழுதி கையெழுத்து போட்டு சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து பாகம் பிரித்துக்கொண்டோம். மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் என்னிடம் தான் இருந்தது அதில் ஒருசில காகிதங்கள் செல்லரித்துபோனது அதில் ஒரு சில காகிதங்கள் என்னிடம் உள்ளது அதன் நகல் என்னிடம் உள்ளது. அந்த செல்லரித்த பத்திரத்தையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும், சான்றிட்ட நகலையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பாகப்பிரிவினை பத்திரத்தின் அடிப்படையில் தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தை பார்த்தால் எந்தெந்த புல எண்கள் எனக்கு ஒதுக்கப்பட்டது எந்தெந்த புல எண்கள் என்னுடைய சகோதரர்களுக்கு ஒதுக்கப்பட்டது என்பது தெரியவரும். நான் தாவாவில் கூறியிருக்கிற புல எண்கள் பாகப்பிரிவினை பத்திரத்தில் இடம்பெறவில்லை என்றால் எனக்கு தெரியாது. பாகப்பிரிவினை பத்திரம் தமிழில் தான் எழுதப்பட்டது. தமிழ் எனக்கு எழுதபடிக்கத் தெரியாது என்றால் சரிதான். எனக்கு விவசாயம் மூலம் வருமானம் வரும். மேற்படி பாகப்பிரிவினையில் எனது சகோதரிக்கு பாகம் எதுவும் கொடுக்கவில்லை. பெண்களுக்கு திருமணம் முடித்து வைத்ததால் பாகம் கொடுக்கவில்லை என்றால் ஆமாம் கொடுக்கவில்லை அவரும் கேட்கவில்லை. அந்த செல்லரித்த பத்திரத்தை நீதிமன்றத்திற்கு எடுத்து வரமுடியுமா என்றால் எடுத்து வரமுடியும். விவசாய வருமானத்தில் தான் எனது மகன்களையும், மகள்களையும் படிக்க வைத்து திருமணம் செய்து வைத்தேன் என்றால் சரிதான். விவசாய வேலையை எனது பிள்ளைகள் என்னுடன் இருந்து செய்வார்களா என்றால் செய்வார்கள். எனது பிள்ளைகள் 8 பேருக்கும் நான் தான் திருமணம் செய்து வைத்தேனா என்றால் முத்தப்பனை தவிர மற்ற அனைவருக்கும் திருமணம் செய்து வைத்தேன். ஏன் எனது மகன் முத்தப்பனுக்கு நான் ஏன் திருமணம் செய்து வைக்கவில்லை என்றால் அவர் வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து அழைத்த வந்துவிட்டார் அந்த பெண் மந்திரி இனத்தை சேர்ந்தவர் நாங்கள் ரெட்டியார் இனத்தைச் சேர்ந்தவர்கள். முத்தப்பனுக்கு குடும்ப அட்டை மற்றும் வாக்காளர் அடையாள அட்டை எந்த முகவரியில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

தாவா சொத்தின் பட்டாக்கள் தற்பொழுது தேவராஜ் பெயரில் உள்ளதாக கூறுகிறார்கள். இதற்கு முன்பு எனது அண்ணன் பெயரில் இருந்தது அதற்கு பிறகு தேவராஜ் பெயரில் மாறியதாக கூறுகிறார்கள். எனது அண்ணன் பெயரில் இருக்கும் பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. வழக்கு சொத்து எனது பெயரில் உள்ளது என்பதற்கு பட்டாவை எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் மணியக்காரரிடம் சென்று தேவராஜ் பெயரில் உள்ள வழக்கு சொத்திற்கான பட்டா எனது பெயரில் மாற்றித் தர இந்த வழக்கு தாக்கல் செய்யும் வரை மனு கொடுத்தேனா என்றால் இல்லை தற்பொழுது கொடுத்துள்ளேன். மேற்படி மனுவை என்று கொடுத்தேன் என்றால் எனக்கு தேதி, மாதம் மற்றும் வருடம் நினைவில் இல்லை நகலும் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தின் பட்டா எண் தெரியுமா என்றால் தமிழே தெரியாது அதனால் பட்டா எண் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தை தவிர வேறு சொத்தும் எனக்கு உள்ளதா என்றால் ஊரில் உள்ளது. பிற சொத்திற்கான பட்டா எண்ணோ, விஸ்தீரணமோ தெரியுமா என்றால் தெரியாது. இன்றைய தேதி வரையில் வழக்கு சொத்தை தேவராஜ் தான் பயிர் செய்து வருகிறார் என்றால் இல்லை நான்தான் பயிர் செய்து வருகிறேன். நான் தான் பயிர் செய்கிறேன் என்பதை நிரூபிக்கும் வகையில் அடங்கல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னால் இன்னொருவர் துணையில்லாமல் நடக்க முடியாது என்றால் சரிதான். நான் வழக்கு சொத்துக்களில் பயிர் செய்வதாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தேவராஜ் தான் வழக்கு சொத்துக்களுக்கு இன்று வரை வரி செலுத்தி வருகிறார் என்றால் நான் கட்டிய வரியை தேவராஜ் கட்டியது போல் காட்டிக்கொள்கிறார். நான் வரி கட்டினால் என் பெயரில் ஏன் ரசீது கொடுக்கப்படவில்லை என்றால் எனக்கு தமிழ் தெரியாததால் தேவராஜ் பெயரில் ரசீது கொடுக்கின்றனர். நான் ஏற்கனவே தேவராஜ் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 174/2010 என்ற வழக்கில் சாட்சியம் அளித்துள்ளேன். வழக்கு சொத்துக்கள் பாகப்பிரிவினை பத்திரத்தில் வந்துள்ளதாக நான் கூறுவது தவறு என்றும் அவ்வாறு வழக்கு சொத்துக்கள் பாகப்பிரிவினை

பத்திரத்தில் இடம்பெறவில்லை என்றால் சரியல்ல. நான் வரி கட்டி வரி ரசீதுகளை தேவராஜ் பெயரில் கொடுப்பதற்கு நானோ எனது மகள்களோ புகார் எதுவும் கொடுத்துள்ளோமா என்றால் இல்லை. இன்றைய தேதி வரை எனது பெயரில் தாவா சொத்திற்கான பட்டா எதுவும் வரவில்லை என்றும், முதலில் எனது அண்ணன் பெயரில் இருந்தது அதன் பிறகு தேவராஜ் பெயருக்கு சென்றுவிட்டது என்றால் சரிதான்.

(Sd/-)..V.Vannamalar
DISTRICT MUNSIF
KATPAD I.